யாழ். நகரில்
போட்டோஸ்டாற் பிரதிகள்
வெளிநாட்டுக் கடதாசியில்
சாதாரண சைஸ்
ரூபா 1/- மட்டுமே
சுப்பகனன்
கொப்பி சேவிஸ்
13, நவீனசந்தை(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 20 ஐப்பசி 3 ஜுல்ஹஜ் 1417 இதழ் 251
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 20-10-78

RECEIVED
LIBRARY

போட்டோ
ஸ்ரற்
ரூபா 1
ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்
0595

# சட்டவிரோதக் கூட்டங்களைக் கலைப்பதற்கான பொலிஸ் அதிகாரங்கள் பற்றி சிவா, நவம் ஆட்சேபம்

(கொழும்பு)

சட்டவிரோதமாகக் கூட்டம் கூடுகிறவர்களைக் கலைப்பதற்காக பொலீஸாருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நேற்று பாராளுமன்றத்தில் நல்லூர்த்தொகுதி எம். பீ. யும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவருமான திரு. எம். சிவசிதம்பரம் வன்மையாகக் கண்டித்துப் பேசினார்

இந்த அதிகாரங்கள் பெரும்பாலும் பொலிஸாரால் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டார்

திரு.. சிவசிதம்பரத்தின் கருத்தை சாவகச்சேரி உறுப்பினர் திரு. வி என். நவரத்தினமும் மற்றும் சில உறுப்பினர்களும் ஆதரித்துப் பேசினார்கள்.

குற்றவியல் நடைமுறைச் சட்டமூலத்தின் மீதான விவாதத்தின்போதே திரு சிவசிதம்பரம் இக்கருத்தை வெளியிட்டார்.

ஒரு வழக்கில் குற்றம்சாட்டப்படுபவர்களுக்கு எதிராகக் கூறப்படும் புகார்களின்விபரம் யாவும் வழக்கு விசாரணைக்கு முன்பே அவருக்கு தெரிவிக்கப்பட்டுவிடவேண்டுமென்றும் வாக்குமூலங்கள்யாவும் சம்பந்தப்பட்டவரின் தாய்மொழியிலேயே பதியப்படவேண்டுமென்றும் திரு. சிவசிதம்பரமும், திரு. வி. என். நவரத்தினமும் வலியுறுத்தினார்கள்

இந்தச் சட்டமூலத்தின் மீதான விவாதம் இன்று சபை கூடும்போது தொடர்ந்து நடைபெறும்.

## சம்பிரதாய உடையில் சபாநாயகர் வந்தார்

நேற்று சபை கூடியபோது சபாநாயகர் ஜனப் பாக்கீர் மாக்கார் சபாநாயகருக்குரிய சம்பிரதாய உடையில் சபைக்குள் பிரவேசித்து ஆசனத்தில் அமர்ந்தார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## சிறிமா மனு மீது தீர்ப்பு ஒத்திவைப்பு

[கொழும்பு]

முன்னாள் பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, ஜனாதிபதி விசேஷ ஆணைக்குழுவுக்கு எதிராகத் தாக்கல் செய்திருந்த மனு மீதான தீர்ப்பை மேன்முறையீட்டு அப்பீல் நீதிமன்றம் நேற்று ஒத்திவைத்தது.

பிரதமர் என்ற முறையிலும் ராஜாங்க அமைச்சர் என்ற முறையிலும் தமது நடவடிக்கைகளை விசாரிப்பதோ, அது பற்றி சிபார்சு செய்வதோ, கருத்துவெளியிடுவதோ ஜனாதிபதி விசேஷ ஆணைக்குழுவின் அதிகாரத்திற்குட்பட வில்லை யென்றும் இதுபற்றிய விசாரணையைத் தொடராதவண்ணம் ஆணைக்குழுவைத் தடைசெய்யுமாறும் கோரி திருமதி பண்டாரநாயக்கா உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல்செய்திருந்தார்.

இதன்மீது விசாரணை நடத்திய நீதிமன்றம் தீர்ப்பளிப்பதை ஒத்திவைத்துள்ளது.

## 'நான் நன்கொடையாக யாரிடமும்வீடுவாங்கவில்லை'

### வதந்திக்குப் பிரதமரின் ஆணித்தரமான மறுப்பு

(கொழும்பு)

பிரதமமந்திரி திரு. ஆர். பிரேமதாசா தாம் யாரிடமோ வீடொன்றை நன்கொடையாகப் பெற்றதாக அடிபடும்வதந்தியை பாராளுமன்றசபையில் ஆணித்தரமாக மறுத்து அறிக்கை விடுத்தார்.

நான் எவரிடமும் நன்கொடையாக வீடு ஒன்றைக் கேட்டுப்பெறவுமில்லை, எவரும் எனக்கு வீடொன்றை நன்கொடையாகத் தரவுமில்லை என்று பிரதமர் சொன்னார்.

கொழும்பிலிருந்த தமது வீடொன்றை விற்றுவிட்டு வேறு வீடொன்றைத் தாம் வாங்கியிருப்பதாக பிரதமர் சொன்னார்.

சொத்துவிபரம் வெளியிடுவதற்கான 1975 பிரகடனத்தின் பிரகாரம் தமதும் தமது மனைவி பிள்ளைகளதும் சொத்துவிபரங்களை தாம் வெளியிட்டிருப்பதாகவும். இனிமேல் 5 ஆண்டுகளுக்கு பின்பே சொத்துவிபரம் வெளியிட கடமைப்பட்டிருந்தபோதிலும் சொத்துநிலையில் ஏற்படும் மாற்றங்களை அவ்வப்போது அதிகாரிகளுக்கு தாம் அறிவித்துவருவதாகவும் பிரதமர் சொன்னார்.

## இளைஞர் பேரவை நிர்வாகசபைக் கூட்டம் இரகசியமாக நடந்தது

[யாழ்ப்பாணம்]

நீண்டகால இடைவெளிக்குப் பின் நேற்றுக் கூடிய இளைஞர்பேரவை நிர்வாகசபைக் கூட்டத்திற்கு முக்கிய பிரமுகர்கள் சிலர் கலந்துகொள்ளவில்லையென்று தெரிகிறது.

திருமலை, மட்டக்களப்பு, மன்னார், வவனியா பிரதிநிதிகளும் சமூகம்கொடுக்கவில்லை.

நிர்வாகசபைக் கூட்டம் யாழ்ப்பாணத்திலுள்ள இளைஞர் பேரவை நிர்வாக அமைப்புச் செயலாளர் திரு. த. சந்ததியார் தலைமையில், தமிழ் தொழிற்சங்க பணிமனையில் நேற்றுமாலை நடைபெற்றதாகத் தெரிகிறது.

இன்றைய அரசியல்நிலையில் தமிழர்விடுதலைக்கூட்டணி மாவட்ட அமைச்சர்கள் பதவியை ஏற்கத்தான் வேண்டுமா என்பது பற்றி, சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டு பொதுச்சபையின் அங்கீகாரத்துக்கு விடப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

கூட்டம் பூட்டிய அறையில் மிக இரகசியமாகவே, நடைபெற்றது. கூட்ட முடிவுகள் எந்தப் பத்திரிகைகளுக்கும் வழங்கப்படவில்லை. (கெ)

உ
சிவமயம்

திருமண அழைப்பு

அன்புடையீர் !

நிகழும் காலயுக்தி வருஷம் ஐப்பசி மாதம் 5-ந் திகதி (22-10-78) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி தொடக்கம் 9-45 மணிவரை உள்ள சுப முகூர்த்த வேளையில்

எனது புத்திரன் திருநிறை செல்வன்
ஞானசேகரம்
(பங்காளர் ராஜு ஸ்ரோர்ஸ்,
யாழ்ப்பாணம்)
அவர்களுக்கும்

எமது புத்திரி திருநிறை செல்வி
சந்திரா தேவி
அவர்களுக்கும்

தொண்டமானாறு செல்வச்சந்நதி முருகன் ஆலயத்தில் திருவருள் துணையால் திருமணஞ் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

வரவேற்பு :- மணமகன் இல்லத்தில் அன்று மாலை 5 மணி தொடக்கம் 7 மணிவரை நடைபெறும்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்

திருமதி கனகம்மா காத்திலிங்கம்
மெயின் வீதி,
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

சி. வே. சிவசுப்பிரமணியமும்
பாரியாரும்
உரிமையாளர்
சுப்பிரமணியன் சோடாக் கம்பெனி
வல்வெட்டித்துறை
ராஜு ஸ்ரோர்ஸ்
67. கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

18-10-78
0603

# “நடைமுறையில் உள்ளது சிங்களஏகாதிபத்தியசட்டமே

## சன்சோனிக் கமிஷன்முன் திருமலை எம். பி. சாட்சியம்

[திருகோணமலை]

“சிங்கள ஏகாதிபத்தியத்தின் அரசியல் சட்டம்தான் இன்று நடைமுறையில் உள்ளது. பாராளுமன்றத்தில் வாக்களிப்பதன்மூலம் தமிழ் ஈழம் கிடைத்துவிடாது''

இவ்வாறு திருமலை எம். பி. திரு. இரா சம்பந்தன் சன்சோனிக்கமிஷன்முன், அரச சட்டத்தரணி திரு தென்னக்கோன்குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது சொன்னர். 'தமிழீழம் நிறுவ தற்போதைய பாராளுமன்றம் இடமளிக்குமா?'' என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இப்படிச் சொன்னர்.

''இன்றைய அரசியல் சட்டத்தில் தமிழ் மொழிக்கு முன்னேற்றமான இடம் கிடைத்துள்ளது என்னவோ உண்மைதான். ஆனல் நடைமுறைப்படுத்தப்படுவதில்தான் உரிமைகள் கிடைத்துள்ளனவா என்பது தெரியவரும்.

இன்றுகூடத் தனிச்சிங்களத்தில் மொழிபெயர்ப்பின்றி அரசாங்கத்திடம் இருந்து எனக்குக் கடிதங்கள்வருகின்றன'' என்று திரு சம்பந்தன் எம். பி. மேலும் சொன்னர்.

---

## பிரி. ஸ்தானிகர் யாழ்ப்பாணத்தில் உரை நிகழ்த்துவார்

[யாழ்ப்பாணம்]

பிரிட்டிஷ் ஸ்தானிகர் திரு. டேவிட் பி. எயர்ஸ், யாழ்ப்பாணம் ட்றிம்மர்] மண்டபத்தில் நாளைமாலை உரை நிகழ்த்துவார்.

ஐக்கிய நாடுகள் சபை யாழ். கிளையும் யாழ். லயன் கழகமும் கூட்டாக ஒழுங்கு செய்துள்ள இக்கூட்டம் ஐக்கிய நாடுகள் சபை யாழ் கிளைத்தலைவர் திரு. யோகேந்திரா துரைசாமி தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இம்மாதம் 24-ம் திகதி யாழ்ப்பாணக்கல்லூரி பேராசிரியர் ஹொல்மஸ் யாழ்ப்பாணம் ட்றிம்பர் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் ஐ நா. தினக்கூட்டத்தில் உரைநிகழ்த்துவார். ஐக்கிய நாடுகள்பைச யாழ். கிளைத் தலைவர் திரு. யோகேந்திரா துரைச்சாமி இக்கூட்டத்துக்கு தலைமைதாங்குவார். (க-அ]

---

## நியமனம்

(நெல்லியடி)

கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்க பதில் பொது முகாமையாளராக யாழ்ப்பாண கூட்டுறவுத் திணைக்களத்தைச் சேர்ந்த கூட்டுறவு பரிசோதகர் திரு. சி. கந்தசாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

---

## மகஜர்

[நாயன்மார்கட்டு]

நல்லூர்த் தொகுதியில் அமைந்துள்ள யாழ்ப்பாண மாநகர ப. நோ. கூ. சங்கக் கிளைகள், நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் கீழ் இயங்கச்செய்யுமாறு கோரி மகஜர் ஒன்றினை நல்லூர் வாழ் மக்கள் வடபகுதி கூட்டுறவு உதவி ஆணையாளருக்கும் நல்லூர் எம். பிக்கும் அனுப்பியுள்ளார்கள்.

---

## பருத்தியடைப்பு கொலை:

## சந்தேகநபருக்கு பிரசவம்; நீதிமன்றம் ஆஜராகவில்லை

(யாழ்ப்பாணம்[

பருத்தியடைப்பில் கொலையுண்ட இளம்பெண்ணின் மைத்துனியும், சந்தேகநபர்களின் ஒருவருமான ரீட்டா சிசுவொன்றை பிரசவித்திருப்பதால், நீதிமன்றத்திற்கு வரவில்லை என்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நீதவான் திரு ஜெகசோதி முன்னிலையில் இவ்வழக்கு கூப்பிடப்பட்டது.

கடந்த தவணையின்போது பிணையில் சென்ற சந்தேக நபரான ரீட்டா நீதிமன்றம் வரவில்லை. அவர் பிரசவித்திருப்பதால் வரவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது பிணையில் சென்ற மற்றொரு சந்தேக நபரான ரீட்டாவின் தங்கை நீதிமன்றம் வந்திருந்தார்.

ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ள, கொலையுண்ட இளம் பெண்ணின் கணவனும் மாமியும், கோட்டில் ஆஜர்செய்யப்படவில்லை.

இதுபற்றி தங்களுக்கு தெரிவிக்கப் படவில்லையென, சிறை உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். அடுத்த தவணைக்கு அவர்களை நீதிமன்றம்கொண்டு வருமாறு நீதவான் கட்டளையிட்டார்.

சந்தேக நபர்கள் சார்பில்

]6ம் பக்கம் பார்க்க]

---

## சிரமதானம்

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் கடலையும், பாதையும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. இச்சிரமதானத்தை உருத்திரபுரம் பகுத்தறிவுப் பாசறை ஒழுங்கு செய்து நடாத்தியது. உருத்திரபுரத்தில் உள்ள இப்பகுத்தறிவுப் பாசறை பல முன்னேற்றப் பணிகளைத் தொடர்ந்து செய்து வருகிறது. (ஈ)

---

யாழ். நகரில்

## கடற்படை கலைவிழா

[யாழ்ப்பாணம்]

இலங்கை கடற்படையின் காரைநகர் முகாம் யாழ்ப்பாணத்தில் கலைவிழா ஒன்றினை கோலாகலமாக நடாத்தவிருக்கிறது.

யாழ். திறந்தவெளியரங்கில் இன்று பிற்பகல் இவ்விழா 'எலாரா' கப்பலின் 23வது ஆண்டு நிறைவினையொட்டி கொண்டாடப்படுகிறது.

கண்டிய நடனம், பாண்ட் வாத்தியஇசை, பாடல்கள் என்பன இதில் இடம்பெறும்.

---

## இலங்கைக் குழுவில் பாஷையூர்வீரர்

[யாழ்விளையாட்டு நிருபர்[

பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த அ. அன்ரன் பங்களாதேஷில் நடைபெற்று வரும் 20 வயதுக்குட்ப்பட்ட ஆசிய இளைஞர் உதைபந்தாட்ட போட்டிகளில் கலந்து கொள்ளும் இலங்கை உதைபந்தாட்ட குழுவில் அங்கம் வகித்து விளையாடி வருகிறார்.

பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் மிகக்குறைந்த வயதை உடையவரான அன்ரன் கழகத்தின் 1 வது பிரிவின் முன்னணி வீரர்களில் ஒருவராவார்.

இவர் கொழும்புத்துறை றோ. க. பாடசாலையின் பழைய மாணவராவார். [இ]

---


## வரி விளம்பரம்

### கல்வி

வீடுகள் சென்று ஆங்கில இலக்கணம், இலக்கியம் (Emma & Mc Beth) ஆங்கிலப் பேச்சு (Spoken English) கற்றுக் கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 0592, மே/பா ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 0592

### விற்பனைக்கு

திருநெல்வேலி கடலையிலிருந்து ½ மைல் தூரத்தில் தோட்டம் செய்யக்கூடிய மின்சார வசதி பெறக்கூடிய பத்து பரப்பு காணி விற்கப்படும். தொடர்பு: இரா. புவனேந்திரன் பூதர் மடம் பருத்தித்துறை வீதி, கோப்பாய் வடக்கு. 0607

## கேள்வி விளம்பரம்

### கொக்குவில் கிராமசபை

1979-ம் ஆண்டுக்கு, பின் வருவனவற்றைக் குத்தகைக்குக் கொடுப்பதற்கான கேள்வி விண்ணப்பங்கள் 1-11-78 பகல் 10 மணிவரை என்னல் ஏற்றுக் கொள்ளப்படும். பத்திரப்பணம் ரூபா 25/-ம் வைப்புப்பணம் ரூபா 50/-ம் செலுத்துவதின் பேரில் 31-10-78 பகல் 12 மணி வரை அலுவலகத்தில் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். அடையாள அட்டையைச் சமர்ப்பித்தே படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். மேலதிக விபரங்கட்கு அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

1. கொக்குவில் ஆடியபாதச்சந்தை.
2. கோண்டாவில் கிழக்கு மீன்மரக்கறிச் சந்தை.
3. கோண்டாவில் புகையிரத நிலையச் சந்தை.
4. கொக்குவில் ஆடியபாதம் ஆட்டிறைச்சிக்கடை.

வி.எஸ்.எஸ். ஒகஸ்ரின்
விசேட ஆணையாளர் கி. ச.
கொக்குவில்.

கிராமசபை பணிமனை.
கொக்குவில்.
18-10-78. 0605

### வகுப்புக்கள்

G. C. E. O. L, A. L ஆங்கில வகுப்புக்களும் பேச்சு ஆங்கிலமும் (Spoken English) காலை, மாலைகளிலும் சனி ஞாயிற்றுக்கிழமைகளிலும் கற்பிக்கப்படுகின்றன. குளிரூட்டல் வகுப்புக்களும் (Refrigeration and Air-Conditioning) தையல், சுருக்கெழுத்து, தட்டச்சு வகுப்புக்களும் நடைபெறுகின்றன. புதிதாகச் சேரவிரும்புவோர் 21-10-78-க்கு முன்னர் சேருக. G. C. E. O. L. A. L. விஞ்ஞானம், வர்த்தகம், கலைவகுப்புக்களுக்குரியஎல்லாப்பாடங்களும் கற்பிக்கப்படும். I. C. M.A. A· C. C A Chartered Accountancy வகுப்புக்கள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும். புதிய வகுப்புக்கள் 28-10-78 காலை ஆரம்பமாகும். யாழ்ப்பாணக் கல்வி நிலையம் 22, இராமையா செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 0604

பருத்தித்துறை நகரம்
1979-ம் வருடத்திற்கான

## கேள்விப்பத்திர அறிவித்தல்

கீழ்க்காணும் குத்தகைகளுக்கும் / கேள்விகளுக்கும் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 10-ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் கீழ்க்குறிப்பிடும் பிணைப்பணமும் பத்திரப்பணமும் 9-11-78 முற்பகல் 11-30 மணிவரை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பத்திரப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

### 1979-ம் வருட குத்தகைகள்

| | பிணைப் பணம் ரூ. ச. | பத்திரப் பணம் ரூ. ச. |
|---|---|---|
| 1. மரக்கறி சந்தை (மக்கள் சந்தை) | 250-00 | 25-00 |
| 2. வான் வண்டில் காலை | 100-00 | 10-00 |
| 3. மீன் சந்தை | 150-00 | 10-00 |
| 4. மாட்டிறைச்சிக் கடை இல. 1. | 150-00 | 10-00 |
| 5. மாட்டிறைச்சிக் கடை இல. 2. | 150-00 | 10-00 |
| 6. ஆட்டிறைச்சிக் கடை | 150-00 | 10-00 |

### 1979-ம் வருட கேள்விகள்

| | | |
|---|---|---|
| 1. மின்சார உபகரணப் பொருட்கள் விநியோகம் | 300-00 | 25-00 |
| 2. சுகாதாரப்பகுதி, வேலைப்பகுதி பொருட்கள் விநியோகம் | 150-00 | 10-00 |
| 3. அச்சிட்ட படிவங்கள் விநியோகம் | 100-00 | 10-00 |
| 4. காகிதாதிகளும் எழுது கருவிகளும் | 100-00 | 10-00 |

அன்ரன் அல்பிரட்,
விசேட ஆணையாளர்,
பருத்தித்துறை நகரம்

விசேட ஆணையாளர் அலுவலகம்,
பருத்தித்துறை, 18-10-78.
0606

யாழ். மத்திய பஸ் நிலையத்தில்.
இன்று ஆரம்பமாகும்
“பெஸ்ரோன்” விளம்பர சேவைக்கு
எமது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேம்.

ரெட் கவ் பிராண்ட்
ஃ பட்டர் ஃ ஜாம்
ஃ சொக்லட் றேல் ஃ பட்டர் கேக்
ஃ பட்டர் மில்க் கிறீம்

தயாரிப்பாளர்கள்
ராஜா என்டர்பிறைசஸ்
கொழும்பு - பதுளை - யாழ்ப்பாணம்.
கிறிஸ்மஸ் சுவை விருந்தாக அறிமுகமாகிறது

RED COW BRAND
PURE
BUTTER
BUTTER MILK CREAM

வெளிநாட்டிலிருந்து விசேஷமாக தருவிக்கப்பட்ட மூலப் பொருள்கள் மூலம் தயாரிக்கப்பட்டு சிகப்பு நிற பசு அடையாளம் கொண்ட பச்சை நிறப் பெட்டிகளில் வருகிறது.



இலங்கை மக்களின் சிக்கன செலவிற்காக தயாரிக்கப்பட்டது
ராஜா என்டர்பிறைசஸ்
இல. 11, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
யாழ். விநியோகஸ்தர்கள் :
சிறி சாயி ஸ்டோர்ஸ்
11, 12, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
விஜயா ஹாட்வெயர்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
அண்ணு கோப்பிக்கடை
இல 1, நவீன சந்தை, சுன்னுகம்.

ஈழநாடு
The Eelanaadu

## கைத்தறியும் தீபாவளியும்

தீபாவளிக்கு இன்னும் சில தினங்களே இருக்கின்றன. தீபாவளிப் பண்டிகையை அடுத்து நத்தார் பண்டிகைவரவிருக்கின்றது.

வெளிநாட்டு உணவுப் பொருள்களும் உடுபுடவைகளும் இன்று பெருமளவில் நமது நாட்டுச் சந்தைகளில் கிடக்கின்றன. சாதாரண மக்களுக்கு இப்பொருள்கள் தாராளமாகக் கிடைக்கக் கூடியமுறையில் விலைகள் இல்லையானாலும் இங்கு நடைபாதை வியாபாரிகள் உட்பட சகல வர்த்தக நிலையங்களிலும் வெளிநாட்டுப் பொருள்கள் இப்போது குவிந்துகிடக்கின்றன.

சில வருடங்களுக்கு முன் கண்ணால் காண்பதற்குக் கூட அரிதாக இருந்த பொருள்கள் இப்போது பெருமளவில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

தீபாவளி, நத்தார் பண்டிகையை முன்னிட்டு மேலும் மேலும் உடுபுடவைகளும உணவுப் பொருள்களும் வந்து குவியலாம். இந்தியாவுக்குச் சென்று வருவதிலிருந்த கெடுபிடிகள் தளர்த்தப்பட்டதால் கள்ளக் கடத்தல் குறைந்து உடுபுடவைகள் தினமும் இங்கு வந்து குவிகின்றன.

வெளி நாட்டு உடுபுடவைகளின் மோகம் அதிகரித்து வருவதால் வசதி குறைந்தவர்களும்கூட அந்தத் துணிகளையே நாடுகின்றனர். உள்நாட்டில் உற்பத்தியாகும் உடுபுடவைகளையும் மற்றும் உற்பத்திப் பொருள்களையும் வாங்கி உபயோகிப்பது தரக் குறைவு என்ற மனப்பான்மையும் நமது நாட்டு மக்கள் மத்தியில் வளர்ந்துவருவதாகத் தோன்றுகிறது.

வெளி நாட்டுப் பொருள்கள் இங்கு வந்து குவிவதாலும் அவற்றையே மக்கள் பெரும்பாலும் உபயோகிப்பதாலும் நமது நாடு செல்வத்தில் செழித்துச் சிறப்பதாகப் பிறர் கருதலாம். ஆனால் நமது நாட்டின் பொருளாதாரம் எதிர்காலத்தில் பெரும் இக்கட்டான நிலையை அடைய நேரிடும்.

கைத்தறி உற்பத்திக்கு உதவியும் ஊக்கமும் அளிக்கவேண்டுமென்று கூறும் அதேசமயம் புதிய இறக்குமதிக் கொள்கையால் கைத்தறி உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படுகிறதென்பதை மறந்துவிடக்கூடாது.

கைத்தறி நெசவாளர் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் நல்லதரமான உடுதுணிகளை உற்பத்தி செய்து கைத்தறி உற்பத்தியையே நம்பி வாழும் குடும்பங்கள் பல நடுத்தெருவில் நிற்கவேண்டியநிலை ஏற்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டிலும் கைத்தறி நெசவாளருக்கு இப்படியொரு கஷ்டநிலை ஏற்பட்டபோது அமரர் அண்ணாவும் மற்றும் தி. மு. கழகத்தினரும் கைத்தறிப்புடவைகளைத் தோளில் சுமந்து தெருத்தெருவாக விற்று கைத்தறியாளருக்குக் கைகொடுத்து மக்களுக்கு வழிகாட்டினார்கள்.

இங்கு கைத்தறிவாரம் கொண்டாடுவோம் என்று திர்மானம் நிறைவேற்றுவதுடன் சரி.

அரசியல்தலைவர்களையும், அரசியல் இயக்கங்களையும் இதற்கு நம்பியிருப்பதை விடுத்து அரசியல் கலப்பில்லாத இயக்கங்கள் கைத்தறி நெசவாளருக்கும் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கும் கைகொடுக்க முன்வரவேண்டும். இதற்காகப் புதிய இயக்கங்கள் தோன்றுவதும் அவசியமாகும். தீபாவளிப் பண்டிகை இதற்கு வழிகாட்டட்டும்.

## "தமிழ்த் தலைவர்கள் சிலரை மயக்கி

# தமிழீழ இலட்சியத்தை அரசு சிதறடிக்க முயற்சிக்கிறது

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்களை - அவர்களின் தலைவர்கள் சிலரை மயக்கி, மாவட்ட மந்திரி எனும் மாயமானின் பின்னே ஓடச் செய்து, தமிழீழத்தை அமைக்கும்கோரிக்கையை சிதறடிக்க அரசு முயல்கிறது என்று ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் மாவட்ட மந்திரிப் பதவி குறித்து வெளியிட்டுள்ள இவ்வறிக்கையில் குற்றஞ் சாட்டுகிறார்.

"மாவட்ட மந்திரிப் பதவியினைப் பற்றி மக்களிடையே மயக்கத்தை உண்டாக்கும் கருத்துக்கள் பரப்பப்பட்டு வருகின்றன. உண்மையில் தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் மாவட்ட மந்திரி பதவி ஒரு மாய மான்தான். தமிழ்மக்களை - அவர்களின் தலைவர்கள் சிலரை மயக்கி இந்த மாவட்ட மந்திரி எனும் மாயமானின் பின்னே ஓடச் செய்து தமிழீழத்தை அமைப்போம எனும கோரிக்கையை சிறைப்படுத்திச் சிதைத்து விடுதற்குச் ஜனாதிபதிஜயவர்த்தன செய்த சூழ்ச்சியின் விளைவுதான் இந்த மாவட்ட மந்திரி பதவி.

"எந்த சிங்கள அரசாங்கமும் எந்த சிங்களத் தலைவரும்- தமிழ் மக்களின் உரிமைகளை முற்றமுழுதாகக் கொடுக்மாட்டார்கள். தமிழ் மக்கள் தமிழ் ஈழத்தை மீள நிறுவினால் மட்டுமே இந்தநாட்டில் விடுதலைபெற்ற தன்மானமுள்ள இனமாக வாழலாம்." இந்த உண்மையினை மறப்பவர்கள் மக்களாக வாழமுடியாது. இந்த உண்மையின் அடிப்படையிலேயே தமிழர் விடுதலைக் கூட்டணி இப்பொழுது இயங்கிவருகின்றது. தமிழர் விடுதலைகூட்டணியினர் இந்தமாயமான் பின்னே ஓடுதலைப்பற்றிச் சிந்திக்கவும் தேவையில்லை.

மாவட்ட மந்திரி பதவியை ஏற்றால் தமிழ்ப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றத் திட்டத்தை தடுத்து நிறுத்தலாம், தமிழர் குடியேற்றத்தை ஊக்கலாம் எனச் சிலர் கூறலாம். சென்ற பல ஆண்டுகளாகத் திட்டமிட்டு நடைபெற்று வரும் சிங்களக் குடியேற்றத்தை ஜனாதிபதி ஜயவர்த்தனவால் நியமிக்கப்படும் மாவட்ட மந்திரி எனும் முக்கால் மந்திரிப் பதவியை ஏற்கும் தமிழர் எவரும் தடுத்து நிறுத்தமுடியாது.

முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் சேர்ந்து முழுமந்திரிகளாக உழைத்த தமிழர்கள் கண்ணீர் சிந்திக் கொண்டு அந்தக் கட்சியை விட்டு விலகவில்லையா?

இந்த மாவட்ட அமைச்சர்களுக்குரிய விடயங்கள் பணிகள் முதலியவற்றையும் ஜனாதிபதியே முடிவுசெய்வார் இந்த அமைச்சர்கள் ஜனாதிபதிக்கு மட்டுமன்றி அமைச்சர் அவைக்கும் கட்டுப்பட்டவர் எனவும் அரசியல் அமைப்பு விதிக்கின்றது. ஜனாதிபதி நினைத்தால் கூடிய அதிகாரங்களை இவர்களுக்குக்கொடுக்கலாம். கொடுத்த அதிகாரங்களைப் பறிக்கலாம். ஒரு கணப்பொழுதில் பதவியில் இருந்து இவர்களை நீக்கலாம். சுருங்கச் சொன்னால் இவர்கள் ஜனாதிபதியின் பிரதிநிதிகளாக அவருடைய எண்ணப்படி ஆட வேண்டியவர்களே! எனவே இந்த முக்கால் மந்திரி பதவியைப்பெற்றுப்பெம்மைக் கூத்து ஆடவிரும்பலாமா?

இந்தமாவட்ட மந்திரிக்கு ஆலோசனைகூறுதற்குமாவட்ட அபிவிருத்திச் சபை நியமிக்கப்படும் என்று மாவட்ட மந்திரிகளைப்பற்றி வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கை விளம்புகின்றது. இந்த மாவட்ட அபிவிருத்திச்சபையில் அந்த மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களும்உள்ளூராட்சி மன்றத் தலைவர்களும் ஜனாதிபதியாற் நியமிக்கப்படுவோவோரும் உறுப்பினராயிருப்பார்கள் இந்தச் சபையிலும் ஜனாதிபதியின் நியமன உறுப்பினர் இடம் பெறுவராம்.

சிறிமா அரசாங்கம் நடத்திய அரசியல் அதிகாரிகள் நாடகத்திலும் பார்க்க மாவட்ட மந்திரிகள் தர்பார் தமிழ் மக்களை முற்றுகச் சிறுமைப் படுத்தி ஜனாதிபதியின் அடிமைகளாக ஆக்குகின்றது. இந்த மாவட்ட மந்திரி நியமனம் அந்த அரசியல் அதிகாரிகளுக்கு இல்லாத சில அதிகாரங்களை மாவட்ட மந்திரிகளுக்குக் கொடுத்து ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சியைத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செல்வாக்கிலுள்ள தமிழ் ஈழத்தில் நிறுவுகிறது. சிங்கள சர்வாதிகார ஏகாதிபத்தியத்தின் தலைவருடைய பிரதிநிதிகளை அரசியல்வாதிகளை-தமிழ் மாவட்டங்களில் குட்டிஅரசர்களாக சர்வாதிகளாக ஆக்கி இனத்தின் அடிமைத்தளையை, தீவிரமாக இறுக்குகின்றது இது ஜனாதிபதியின்அளப்பரிய அரசியல் சாணக்கியமாகும். இதனால் தமிழ்ஈழக் கோரிக்கையைப் புதைத்துவிடலாம் என அவர் மனப்பால் குடிக்கிறார். எனவே மாவட்டமந்திரி நியமனத்திட்டத்தை எவ்வித மயக்கமும் தயக்கமுமின்றி தமிழர்கள் முழுமூச்சுடன் எதிர்க்கவேண்டிய சூழ்நிலை தான் உருவாகிவிட்டது என்பதை எவரும் மறுக்கமுடியாது. (உ)

## திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

விற்பனை அபிவிருத்தித் திணைக்கள பொது சேவா சங்கத்தின் வடமாநிலக் கிளை எதிர்வரும் 22-ந் திகதி மாலை தாய்ச்சங்கத் தலைவர் ஜீ. டி சந்திரதாசாவினால் கச்சேரிக்கு அண்மையிலுள்ள விற்பனைத் திணைக்கள மத்திய விநியோக கிளை முன்றலில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படும்.

மேற்படி விழாவிற்கு பிரதம விருந்தினர்களாக யாழ். பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன், விற்பனைத் திணைக்கள ஆணையாளர் திரு. வாமதேவா கலந்துகொள்வார்கள்.

வடமாநில விற்பனை அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. எஸ். கந்தசாமி உட்பட பலர் சிறப்புச் சொற்பொழி வாற்றுவார்கள் நிகழ்ச்சிகளின் இறுதியில் பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவிருக்கின்றன. (ஊ)

## யாழ். நீர்விநியோக விஸ்தரிப்பு:

# உடன் ஆரம்பிக்குமாறு பிரதிஅமைச்சர் உத்தரவு!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர நீர்விநியோக திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்குமாறு உள்ளூராட்சி பிரதியமைச்சர் திரு- பி. சி. இம்புலான உத்தரவிட்டார்.

இத்திட்டத்திற்கான 5 லட்சம் ரூபா ஏற்கனவே யாழ் மாநகரசபையினால் செலுத்தப்பட்டிருந்தது. ஆனால் வேலைகள் ஆரம்பிப்பதில் தாமதம் எற்பட்டுவந்தது.

வவுனியா மாநாட்டிற்கு வந்திருந்த பிரதிஅமைச்சா திரு. இம்புலானவிடம் யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. கே. சிவஞானம் இவ் விஷயத்தை தெரிவித்தார். அப்போது உள்ளூராட்சி அமைச்சு செயலாளா திரு. ஆர். பாஸ்கரலிங்கமும் சமுகமாயிருந்தார். பிரதி அமைச்சர் இத்திட்டவேலைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு உத்தரவிட்டார்.

அரசாங்க அதிபரும் இவ் வேலை ஆரம்பமாவதற்கிருந்த சிலதடங்கல்களை நீக்கியதை தொடர்ந்து இவ்வேலை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)

## பெயர்ப்பலகைகளில் தமிழுக்கு முதலிடம்

### திருக்குறள்முன்னணிக்கழகம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக நிலைய அதிபர்களைச் சந்தித்து தமிழுக்கு முதலிடம் கொடுத்து. பெயர்ப் பலகைகளை அமைக்குமாறு வேண்டுகோள் விடுப்பது என்று யாழ். திருக்குறள் முன்னணிக் கழகம் தீர்மானித்துள்ளது.

இம்மாதம் 21ம் திகதி மேற்குறிப்பிட்ட பணியில் 50 தொண்டர்களை ஈடுபடுத்துவது என்றும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

திருக்குறள் முன்னணிக் கழகப் பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேறறப்பட்ட தீர்மானங்களின் விபரம் வருமாறு:-

சமுதாயக் குறைபாடுகளை நீக்கி, சுயமரியாதை சமுதாயத்தை அமைக்குங் பணிக்கே முழுமையாக இக்கழகம் ஈடுபடல்வேண்டும்.

தைத்திருநாளில் யாழ். நகரில் சிந்தனையை வளர்க்கும் வகையில் கலை விழா ஒன்றை நடத்தல்

முன்னணிக்கழகத்திற்கு புதிய அமைப்பு விதிகளைத் தயாரிக்க திரு. மகேஸ்வரன் தலைமையில் ஒரு குழுவும், கலை விழாவினை ஒழுங்கு செய்ய திரு சுந்தரலிங்கம் தலைமையில் ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது. (இ)

### மணிவிளக்கு

பேராசையையும் பொறாமையையும் பணத்தை அபரிமிதமாகச் சேர்த்தலையும்விட்டு ஒழி.
—ஸ்ரீசுவாமி
சிவானந்தசரஸ்வதி

## தாழையடி துறை ஊடாக உப்பு ஏற்றுமதி?

(நெல்லியடி)

ஆனையிறவில் உற்பத்தியாகும் உப்பு, விரைவில் தாழையடித்துறை ஊடாக ஏற்றுமதி செய்யப்படவுள்ளது.

இதற்கென விசேட இறங்குதுறையும் அமைக்கப்படவுளளது.

இது சம்பந்தமாக உப்பு, கப்பல் கூட்டுத்தாபன உயர் அதிகாரிகள், அண்மையில் தாழையடிக்கு விஜயம்செய்து இறங்குதுறை அமைக்கப்படவுள்ள இடத்தினை பார்வையிட்டுச் சென்றுள்ளார்கள்

ஆனையிறவில் உற்பத்திசெய்யப்படும் உப்பு காங்கேசன் துறைமுகம் ஊடாகவே தற்சமயம் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது ஆனையிறவிற்கும் காங்கேசன்துறைக்கும் இடையேயுள்ள தூரம் அதிகமாக இருப்பதால் தாழையடி ஆறுமைல்களாக இருப்பது மிகவும் வசதியாக அமைந்துள்ளது எனக் கருதப்படுகின்றது.

## கவியரங்கு

(கிளிநொச்சி)

வாணிவிழாவை முன்னிட்டு வட்டக்கச்சி அ. த. க. பாடசாலையில் சிறப்புச் சொற்பொழிவுகளும் கவியரங்கும் நடைபெற்றன. கவிஞர் கே. இராஜலிங்கம் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர்கள் சு. பிரபலசிங்கம் சின்ன இராஜேஸ்வரன் மு. கமலாவதி ப சாந்தகுமாரி ஆகியோர் பங்குபற்றினர்கள் கிளிநொச்சிப்பிரதேச நுண்கலைக்கழகத் தலைவர் திரு வீரசிங்கம் சிறப்புச்சொற்பொழி வாற்றினர்.

# ஜனநாயகப் பண்புகளை எதிர்ப்போரும் ஆதரிப்போரும் சிக்மகளூரில் போட்டி

## இடைத்தேர்தல் பிரசாரத்தில் சந்திரசேகர்

பெங்களூர், அக். 19
ஜனநாயகப்பண்புகளை ஆதரிப்போருக்கும் எதிர்ப்போருக்கும் இடையே சிக்மகளூர் தொகுதி இடைத் தேர்தலில் போட்டி நடைபெறுகிறது.

இவ்வாறு ஜனநாயகக் கட்சித்தலைவர் திரு சந்திரசேகர் சிக்மகளூர் தொகுதியில் நடைபெற்ற பிரசாரக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினர்.

திரு. சந்திரசேகர் மேலும் பேசுகையில் கூறியதாவது;.

ஜனதாக்கட்சி பிளவுபட்டுவிடும் என்று எதிர்க்கட்சிகள் மனப்பால் குடித்துக்கொண்டிருக்கின்றன. அது கனவில் நடைபெருது என்பதை உறுதியாகக் கூறுகிறேன்.

ஜனதாக்கட்சி பிளவுபடும் என மற்றவர்கள் எதிர்பார்ப்பதற்குப் பதிலாக அது வலுப்பெறும் என்பதைக் கூறிவைக்க விரும்புகிறேன்.

கட்சிஉறுப்பினர்களிடையே கருத்துவேறுபாடு இருக்கிறது என்பது உண்மையே. ஆனாலும் எவரும் எமதுகொள்கையிலிருந்து பிறழ்ந்துசெல்ல மாட்டார்கள் என்பது நிச்சயம். [இ]

## இந்திய-பாக். ரயில் சேவை?

புதுடில்லி, அக். 19
இந்திய-பாகிஸ்தான் ரயில் போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான மாநாடு ஒன்றுநேற்று புதுடில்லியில் ஆரம்பமாகியது.

இந்திய-பாகிஸ்தான் அதிகாரிகளின் இம்மூன்றுநாள் மகாநாட்டின் இறுதியில் ரயில் போக்குவரத்துக்கான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

## வால்மீகி நினைவுதினம்

புதுடில்லி, அக். 19
மகாகவி வால்மீகி முனிவரின் நினைவுதினம் நேற்று ராஷ்டிரபதி பவனில் கொண்டாடப்பட்டது.

விழாவுக்குத் தலைமைவகித்த இந்திய ஜனுதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டி தமதுரையில், வால்மீகி முனிவர் பெரும் ஞானி என்றும் ஹரிஜனர்களும் புகழின் உச்சியை எட்டுவது அக்காலத்தில் சாத்தியமாயிருந்தது என்பதை வால்மீகி முனிவரின் அமர இதிகாசம் எடுத்துக்காட்டுகிறது என்றும் கூறினர். (இ)

## சஞ்சய்காந்தியின் மனு நீதிமன்றத்தில் நிராகரிப்பு

புதுடில்லி, அக். 19
ஷா கமிஷன்முன் ஆஜராக மறுத்தமைக்காக டில்லி நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டிருந்த வழக்கு விசாரணையை ஒத்திவைக்குமாறு திருமதி இந்திராகாந்தியின் புதல்வர் சஞ்சய் காந்தி சமர்ப்பித்திருந்த மனுவை டில்லி மெற்ற பொலிட்டன் நீதிபதி நேற்றுநிராகரித்தார்.

லக்னே நீதிமன்றத்தில் தம் மீது சுமத்தப்பட்ட வழக்கில் விசாரணை ஒன்று, அதே தினத்தில் நடைபெறஇருப்பதால் இவ்வழக்கை ஒத்திவைக்குமாறு சஞ்சய்காந்தி தமது மனுவில் கேட்டிருந்தார்.

மனுவை நிராகரித்த நீதிபதி முன்னைய உத்தரவுப்படி இம்மாதம் 21ந் திகதி டில்லி நீதிமன்றத்தின்முன் ஆஜராகுமாறு உத்தரவிட்டார். [இ]

## ஜெ.பி.யை சந்திக்கிறர்

புதுடில்லி, அக். 19
இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் இம்மாதம் 24ம் திகதி இந்திய சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணைச் சந்திப்பார்.

இம்மாதம் 24ந்திகதி 2நாள் விஜயம் ஒன்றைமேற்கொண்டு பீகார் செல்லும்போதே இச்சந்திப்பு இடம்பெறும். (இ)

## அச்சுவேலி, வசாவிளான் பாடசாலைகளில் சமூகக்குறைபாடு?

### விசாரணை செய்யக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
"மாணவர்களுக்கு முன்மாதிரியாகவும், ஒழுக்கசீலராகவும் இருக்கவேண்டிய அதிபர், ஆசிரியர்கள் சமூகக் குறைபாடுகளை ஒழிக்கும் விடயத்தில் அநாகரீகமாக நடந்து கொள்கின்றனர்."

இவ்வாறு அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபைச் செயலாளர் திரு. பி. ஜே. அன்ரனி வடமாநில வித்தியாதிபதிக்கு எழுதியுள்ள முறையீடு ஒன்றல் கூறியிருக்கிறர்.

இம்முறையீட்டில்கூறப்பட்டிருப்பதாவது:

அச்சுவேலியிலுள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற சரஸ்வதிபூசை நிகழ்ச்சிகளில் சிறுபான்மை, தமிழ்ப்பிள்ளைகள் சாதி காரணமாகப் பங்கெடுக்கவிடாமல் புறக்கணிக்கப்பட்டார்களென்றும் அப்புறக்கணிப்பைப் பொறுக்க முடியாத பிள்ளைகள் மனவேதனையுடன் தத்தம் வீடுகளுக்குத் திரும்பினர் என்றும் பிள்ளைகளின் பெற்றேர் எமக்கு முறையிட்டுள்ளனர். மேலும் வசாவிளான்பகுதி பாடசாலை ஒன்றிலும் சாதி காரணமான புறக்கணிப்பு நிகழ்ந்துள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. அது சம்பந்தமாக மேற்படி பாடசாலைப் பெற்றேரை விசாரித்தபோது அச்செய்தி உண்மையென்று அறிந்து கொண்டோம்.

பாடசாலைகளில் சமூகக் குறைபாடுகளை நீக்கும்பொருட்டு, வடபகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்கள், கல்வி அதிகாரிகள் கொண்ட மகாநாடொன்றை அண்மையில் கூட்டியிருந்தீர்கள். அம்மகாநாட்டின்பின் பாடசாலைகளில் நிலவும் சமூகக் குறைபாடுகளை நீக்கும்பொருட்டு பாடசாலைகளில் கவிதை, கட்டுரை, பேச்சு, நாடகப் போட்டிகளை நடாத்த நடவடிக்கையெடுத்திருந்தீர்கள். அம்முற்போக்கான நடவடிக்கைகளுக்குச் சவால்விடுவது போன்று இந்நிகழ்ச்சிகள் பாடசாலையில் இடம்பெற்றுள்ளன.

மாணவர்க்கு முன்மாதிரியாகவும், ஒழுக்கசீலராகவும், புத்தி புகட்டுபவராயும் இருக்கவேண்டிய அதிபர், ஆசிரியர்கள் இவ்வாறன அநாகரிகமான செயலில் ஈடுபட்டமையையிட்டு எமது மகாசபையினர் மிக வருத்தமடைவதோடு இந்நடத்தையை வன்மையாகக் கண்டிக்கவும் செய்கின்றது.

எனவே இதுசம்பந்தமாகப் பூரண விசாரணை செய்து, சம்பந்தப்பட்டவர்கள்மேல் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேம். (உ)

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)
நேற்று முன்தினம் இழுக்கப்பட்ட 685 வது தேசிய சுவீப்பின் முதல்மூன்று முடிவுகளும் பின்வருமாறு:

1ம் பரிசு
**17 H 0594**
ரூ. 1,000,00

2ம் பரிசு
**24 B 0668**
ரூ. 40,000

3ம் பரிசு
**09 J 0069**
ரூ. 10,000

ஆறுதல் பரிசுகளாக ரூபா 1717 சதம் 50 பெறும் நூறு டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 18 A 0578 | 10 A 0636 |
| 04 A 0225 | 19 A 0466 |
| 09 A 0090 | 27 B 0503 |
| 21 B 0752 | 26 B 0134 |
| 10 B 0912 | 23 B 0027 |
| 19 B 0950 | 12 C 0452 |
| 09 C 0540 | 24 C 0481 |
| 05 C 0165 | 09 C 0131 |
| 23 C 0315 | 06 D 0058 |
| 01 E 0726 | 29 E 0167 |
| 02 E 0984 | 04 F 0723 |
| 08 F 0214 | 20 F 0482 |
| 31 F 0870 | 24 G 0244 |
| 08 G 0210 | 13 G 0563 |
| 25 H 0411 | 10 H 0866 |
| 09 H 0234 | 27 H 0704 |
| 10 H 0741 | 11 H 0863 |
| 28 H 0017 | 24 H 0641 |
| 25 H 0330 | 04 H 0999 |
| 05 J 0090 | 01 J 0238 |
| 05 J 0255 | 27 J 0152 |
| 11 K 0541 | 33 K 0750 |
| 01 L 0377 | 32 L 0932 |
| 11 L 0338 | 11 L 0253 |
| 15 M 0360 | 10 M 0271 |
| 31 M 0388 | 24 M 0724 |
| 18 N 0333 | 26 N 0544 |
| 03 N 0645 | 25 O 0571 |
| 07 O 0974 | 20 O 0578 |
| 23 O 0205 | 03 P 0128 |
| 26 P 0531 | 31 P 0241 |
| 11 P 0972 | 29 P 0949 |
| 12 Q 0835 | 01 Q 0624 |
| 06 Q 0684 | 01 Q 0664 |
| 32 Q 0996 | 19 Q 0941 |
| 15 R 0108 | 25 R 0313 |
| 06 R 0628 | 17 R 0021 |
| 22 R 0989 | 21 S 0541 |
| 23 S 0324 | 05 S 0708 |
| 31 S 0609 | 10 U 0501 |
| 04 U 0665 | 05 U 0418 |
| 28 U 0164 | 19 V 0470 |
| 06 V 0532 | 17 W 0886 |
| 03 W 0347 | 02 W 0763 |
| 15 W 0224 | 12 W 0490 |
| 21 W 0241 | 19 X 0615 |
| 33 X 0670 | 22 X 0737 |
| 06 X 0186 | 04 X 0764 |
| 26 X 0610 | 30 Y 0513 |
| 04 Y 0291 | 03 Y 0592 |

(இவையாவும் உறுதிப்படுத்தப் படவேண்டும்)

## அ. இ. சி. தமிழர் மகாசபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை பொதுச்சபைக் கூட்டம் இம்மாதம் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் யாழ், சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

சிறுபான்மைத் தமிழ் இயக்கங்கள் ஒன்றுசேர்ந்து ஐக்கிய முன்னணி அமைப்பது பற்றியும் பாடசாலையில் சாதிப் பாகுபாடுகாட்டுவதுபற்றி நடவடிக்கை எடுப்பது பற்றியும் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது. (ஈ)

## சுற்றுலா

[கம்பளை]
கம்பளை சாஹிரா கல்லூரி ஆசிரியர்கள் இம்மாதம் 28ந் திகதி சுற்றுலா ஒன்றை மேற்கொள்கின்றனர். பண்டாரவளை, கதிர்காமம், ஜாஎல, கொழும்பு ஆகிய இடங்களுக்குச் செல்வார்கள்.

## தடுப்பூசி

[கம்பளை]
வேகமாக பரவிவரும் காய்ச்சலை தடைசெய்ய கம்பளை சாஹிராக்கல்லூரி மாணவர்கட்கு தடுப்பூசி மருந்துசெலுத்தப்பட்டது. கடந்த மாதமும் இவர்கட்கு தடுப்பூசி போடப்பட்டது. இது இரண்டாவது முறையாகும்.



**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 2-45, 6-45, 10-00
முத்துராமன்-ஸ்ரீவித்யா
காலங்களில் அவள்
வசந்தம்

## பாடசாலை வரலாறு

(நாயன்மார்கட்டு)
நாயன்மார்கட்டு வித்தியா சாலை ஸ்தாபகர் வரலாறு விரைவில் நூல் உருவம் பெற விருகிறது.

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
முத்துராமன்-ஜெய்சித்திரா
இன்ஸ்பெக்டர்மனைவி

**Rio** (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
CITY OF DEATH

**சாந்தி** (யாழ்ப்பாணம்)
போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
முத்துராமன் - சௌகார் - மேஜர்
பாலையா - நாகேஷ் நடித்த கே. பாலசந்தரின்
பாமா விஜயம்

**REGAL** (Jaffna)
Phone: 360
Daily 4-30, 7-00, & 9-30 P. m
Flying Ship And The
Nights of Circus
(color)
அற்புத ஸர்க்கஸ் காட்சிகள் நிறைந்தது
அனைவரும் பார்க்க வேண்டிய படம்.

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஆலயமணி
(புதியபிரதி)

**லிடோ** (யாழ். நகர்)
போன்: 7898 தினசரி 4 காட்சிகள்
நினைவில் நின்றவள்

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-15, 2-15, 6-15 & 9-45
சிவாஜி ... சாவித்திரி ... பாலையா
சந்திரபாபு ... தங்கவேலு நடித்த
காத்தவராயன் (புத்தம்புதியபிரதி)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள் கடைசி வாரம்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
ஊத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
போன்: 466 தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - தேவிகா
நடித்த
வாழ்க்கைப்படகு
(புதிய பிரதி)

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஃ மரிக்கார் ராமதாஸ்
ஃ ஹெலன்குமாரி
செல்வசேகரன்-சிவராம் - ஜவாகர்-ராஜகோபால்
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து!
ஏமாளிகள்

இன்று முதல்
**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்., அஞ்சலிதேவி
நடித்த
மர்மயோகி
(புத்தம்புதிய பிரதி)

## இன்றைய இராசிப்பலன்

புரட்டாதி மாதம் 3-ந் திகதி
வெள்ளிக்கிழமை
(20-10-78)

**மேஷம்:-** துன்பத்தின் ரேகைகள் படரும். எதிலும் தயக்கம் ஏற்படும். ஆதரவு கொடுத்தவரே முடிவில் கையை விரிக்கக்கூடும். கடன்தொல்லை அதிகரிக்கலாம் நிதானம் வேண்டும்.

**இடபம்:-** ஆத்திரப் படுவதால் நண்பர்களையும் கூட பகைத்துக் கொள்ளுவீர்கள். எழுத்து மூலம் தொடர்பு கொள்வதை இன்று தவிர்த்துக் கொள்ளவும். குழந்தையொன்றின் உடல் நலமும் பாதிக்கப்படக் கூடும்.

**மிதுனம்:-** வாழ்க்கைப் பூங்காவில் வசந்தம் நிலவும். சுபகருமங்கள் நடைபெறும். சுற்றமும் சூழும்,

**கடகம்:-** நினைத்தது நடக்காது. நிம்மதி பறக்கும். நெடும்பயணம் வேண்டாம். பொருள்தவறக்கூடும். அதிக சிந்தனையைத் தவிர்க்கவும்.

**சிங்கம்:-** உறவுகள் பலப்படும். உள்ளத்தில் உவகை துள்ளும். உயர்வுக்கு வழிப் பிறக்கும் உவப்பான தினம்.

**கன்னி:-** கனிவானபேச்சு காந்தம்போல் பார்வை. கன்னியர் உறவு காதலுக்கும் இடமுண்டு. கவர்ச்சிகரமான நாள்.

**துலாம்:-** தவறுகள் நடக்கலாம். நிலையும் தடுமாறும். நண்பர்களே காலைவாரி விடக் கூடும். சிலருக்கு அன்னிய வாசமும் ஏற்படலாம்.

**விருச்சிகம்:-** பொன்னுன வாழ்வு பெண்ணாலேகிட்டும். கண்ணியம் கடைவிரிக்கும் கடமையும் சிறக்கும்.

**தனுசு:-** நாளெல்லாம் அலைச்சல் உடலில் நலிவு தோன்றும். பிணிக்கு இடங்கொடாது சுகாதாரத்தைப் பேணுக.

**மகரம்:-** கைகொடுத்து உதவுவதற்கு தந்தை முன்வருவார். காரியசித்தியும் கிட்டும் நீண்டநாள் எதிரிகள் இன்று மீண்டும் நண்பர்கள் ஆவார்கள. திருப்தியான தினம்.

**கும்பம்:-** தொழில்துறையில் நல்மாற்றங்கள் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். இன்று சுபதினம்.

**மீனம்:-** உழைப்பினால் முன்னேற்றம் உண்டு. வியாபாரத்துறையில் விருத்தியுண்டு. உயர் கல்வியில் ஈடுபடுவோர்களுக்கு உற்சாக தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## வடமாகாண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

(தெல்லிப்பழை)

வயாவிளான் ஞான வைரவர் சனசமூக நிலையத்தின் ஆதரவில், வயாவிளான் 'ஜொலி பேட்ஸ்' வி. கழகம் நடாத்திவரும் வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நவம்பர் மாத இறுதியில் நடைபெறவிருக்கிறது இம்முறை இப்போட்டிகளை விரிவான முறையில் நடாத்துதலுடன் மின்னொளியிலே நடாத்தப்படும் என்று நிலையச் செயலாளர் திரு. எம். ஜெகநாதன் அறிவித்துள்ளார்.

வடமாகாண விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்படும். இப்போட்டிகள் மாவட்ட ரீதியிலே நடாத்தப்பட்டு பரிசில் வழங்கப்படும்.

(உள)

## இந்திய-பாக். 1-வது டெஸ்ட்

# பாக். வீரரின் பந்துவீச்சு: பேடி நேரில் ஆட்சேபம்

பைசலாபாத், அக். 19

இந்திய பாகிஸ்தான் கிரிக்கட் டெஸ்டின் மூன்றுவது நாளான நேற்று இந்திய ஆரம்பதுடுப்படி வீரரும் உதவி காப்டனுமான சுனில் கவாஸ்கர் ஆடிக்கொண்டிருந்தபோது தமது காப்டன் பிஷன்சிங் பேடியை மைதானத்திற்கு அழைத்து பாகிஸ்தான் வீரர் சர்வாஸ் நவாஸின் அதிவேகப் பந்துவீச்சு (பம்பர்ஸ்) பற்றி ஆட்சேபம் தெரிவித்தார்.

பேடி இதுபற்றி பாக் காப்டன் முஷ்ராக் முகமட்டிடம் தெரிவித்ததையடுத்து நவாஸ் சிறிது நேரம் பந்துவீசுவதிலிருந்து காப்டனால் நிறுத்தப்பட்டார்.

இந்த டெஸ்ட் ஆட்டத்தை சுமார் 20 இந்தியர்கள் மட்டுமே நேரில் பார்வையிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது போக்கு வரத்து கட்டுப்பாடு காரணமாக இந்திய வீரர்களின் உறவினர்களுக்கு மட்டுமே பாகிஸ்தான் செல்ல விசாவழங்கப்பட்டிருந்தது.

இதேவேளையில் புதுடில்லியில் உள்ள ஆயிரக்கணக்கானமக்கள் தமது வீடுகளில் இருந்தபடியே டெலிவிஷன் மூலம் இந்த டெஸ்ட் ஆட்டத்தை கண்டுகளித்தனர்,

இந்தியாவுக்கு வெளியே நடைபெற்ற டெஸ்ட் ஆட்டத்தை டெலிவிஷன் மூலம் இந்தியமக்கள் பார்வையிட்டது இதுவே முதல்தடவையாகும். (இ)

# உதைபந்தாட்டம்

(அரியாலை)

யாழ். பரியோவான் கல்லூரிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் 1ம் பிரிவுப்போட்டியில் 4-0 கோல்களாலும் 3ம் பிரிவுப்போட்டியில் 3-2கோல்களாலும் பரியோவான் கல்லூரி வெற்றியீட்டியது. 2-ம் பிரிவுப்போட்டியில் இருகோஷ்டிகளும் தலா 1-1 கோல்களை அடித்துச் சமனுக்கிக்கொண்டது.

ஊர்காவற்றுறை அர்ச் அந்தோனியார் கல்லூரிக்கும், யாழ். பரியோவான் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற 2ம், 3ம் பிரிவு உதைபந்தாட்டப்போட்டியில் இருகோஷ்டிகளும் இறுதிவரை மிகவும் உற்சாகமாக விளையாடியபொழுதிலும் ஒரு கோலையும் அடியாது சமனுக்கிக்கொண்டன.

இப் போட்டிகள் யாவும் பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

### ஒஸ்மானியா வெற்றி

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச்சங்கம் நடாத்திய உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக்கல்லூரி 2ம் பிரிவு வேலணை மத்திய மகா வித்தியாலயத்தை 9—1 என்ற கோல்களைப் போட்டு வெற்றிபெற்றது.

3ம் பிரிவுக்கான போட்டியில் ஒஸ்மானியாக் கல்லூரி வேலணை மத்தியமகா வித்தியாலயத்தை 4—0 கோல்களால் வெற்றிபெற்றது.

ஒஸ்மானியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளுக்கு நடுவர்களாக முறையே திரு. தயாளன், திரு. எஸ், சிவராஜா ஆகியோர் கடமையாற்றினர். (உ)

### இன்றைய மோதல்

குருநகர் சீ-நோர் விளையாட்டுச் சங்கத்திற்கும் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையிலான சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி ஒன்று இன்று புதன்கிழமை யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும்.

### அரியாலை வெற்றி

அரியாலை ஸ்போட்ஸ் கிளப்பிற்கும், யாழ். பரியோவான் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் முதலாம் பிரிவுக்கான போட்டியில் 4—2 கோல்களால் அரியாலை ஸ்போட்ஸ் கிளப் வெற்றியீட்டியது. இரண்டாம் பிரிவுப் போட்டியில் தலா இரு கோஷ்டிகளும் 1—1 கோல்களை அடித்துச் சமனுக்கிக்கொண்டன இப்போட்டி பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

### நெல்லியடி வெற்றி

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய உதைபந்தாட்ட கோஷ்டியும், யாழ் மத்திய கல்லூரி உதைபந்தாட்ட கோஷ்டியும், யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் மோதிக்கொண்டன.

இம்மோதலில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய கோஷ்டி யாழ். மத்திய மகா வித்தியாலய கோஷ்டியை தோற்கடித்தது.

### பாடும் மீன் வெற்றி

குருநகர் சீ-நோர் வலைத் தொழில்சாலைக்கும், பாடும் மீன் 2-ம்பிரிவுக்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் பாடும் மீன் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல்களைப் போட்டு வெற்றிபெற்றது.

இப்போட்டி குருநகர் சீ-நோர் வலைத் தொழில் சாலைக்கு முன்பாக அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டிக்கு நடுவராக திரு. கே. பிரான்சிஸ் கடமையாற்றினர்.

## மின்னொளியில் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி

(தெல்லிப்பழை)

மல்லாகம் சென். சேவியர் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடாத்திவரும் ஓவர்-கேம் சாம்பியன் போட்டியில் ஆவரங்கால் சரஸ்வதி வி. கழகத்தை எதிர்த்து விளையாடிய சிறுப்பிட்டி மக்கள் வி. கழகத்தை தோற்கடித்து சாம்பியனைத் தெரிவு செய்யப் பட்டுள்ளது.

தொடர்ந்து நடைபெற்ற செற்-அப் போட்டியொன்றில் காரைநகர் கடற்படை வி. கழகம், மட்டுவில் மோகனதாஸ் வி கழகத்தை தோற்கடித்து, சாம்பியன் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தது. ஆவரங்கால் சரஸ்வதி வி.கழகமும், கடற்படை வி. கழகமும் மோதிக் கொண்ட சாம்பியன் போட்டியில் கடற்படை வி. கழகம் சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் இடத்தை ஆவரங்கால் சரஸ்வதி கழகம் பெற்றுக் கொண்டது, திரு. எம். ஜெகநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

(உள)

மாதகல் பெண்கடத்தல்:

## சந்தேக நபர்களுக்கு தொடர்ந்து றிமாண்ட்

(மாவிட்டபுரம்)

மாதகல் இளம்பெண் கடத்தல் தொடர்பான சந்தேக நபர் அறுவரும் இம்மாதம் 27ம் திகதி வரை தொடர்ந்து றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

மாதகலைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் துப்பாக்கி முனையில் கோஷ்டி ஒன்றினால் கடத்திச்செல்லப்பட்டது தொடர்பாக சங்கானைப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட அ'மகாதேவன் என்பவரும் மல்லாக நீதிமன்றத்தில் சரண்புகுந்த அ. பரஞ்சோதி, ரி. துரைசிங்கம், பி. தயானந்தம், எஸ். யோகரத்தினம், எ. ஆறுமுகம் ஆகியோரும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

இவர்கள் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது சந்தேக நபர்களைப் பிணையில் விடுமாறு அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சு. நடராசா கோரினர்.

வழக்காளி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் "மேற்படி சம்பவம் துப்பாக்கி உபயோகித்தது தொடர்பானது. சம்பவம் நடைபெற்ற வீட்டில் சந்தேகநபர்கள் நடத்திய துப்பாக்கிப்பிரயோகத்திற்கு ஆதாரமாக தடையங்கள் மீட்கப்பட்டன. அங்கு சன்னங்களையும் துப்பாக்கிச்சூடு அடையாளங்களையும் கண்டதாக சுன்னாகம் பொலிசார் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர். ஆகவே துப்பாக்கி உபயோகித்தது தொடர்பான இச் சந்தேகநபர்களுக்கு பிணை வழங்க இந் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை. உயர்நீதிமன்றம்தான் இவர்களுக்கு பிணை வழங்குவதை முடிவுசெய்யலாம என்று புதிய சட்டவிதிகள் கூறுகின்றன" என்று சுட்டிக்காட்டி சந்தேகநபர்களைப் பிணையில் விடுவதை ஆட்சேபித்தார்.

இதையடுத்து மல்லாகம் பதில்நீதிபதி திரு. ஜி. வி. பாலசிங்கம் சந்தேகநபர்களை இம்மாதம் 27ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

வழக்காளி தரப்பில் சங்கானைப் பொலிசாருடன் சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம் திரு. கே. விஜேதன் ஆகியோர் ஆஜராகினர். சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் சு. நடராசா, மு. திருநாவுக்கரசு, எஸ். புண்ணியமூர்த்தி ஆகியோர் ஆஜராகினர். (இ)

## கார்—ரயில் மோதல்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் காரைக்கால் பாதுகாப்பற்ற புகையிரதக்கடவையில் இடம் பெற்ற கார் ரயில் விபத்தில் காரில் பிரயாணம்செய்த மூவரும் காயமின்றித் தப்பினர். கார் சுக்குநூறுகியது.

இச் சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றது.

கார்ச் சாரதி காங்கேசன் துறையிலிருந்து வந்த சரக்கு ரயிலை அவதானியாது புகையிரதக்கடவையைக் கடக்க முயன்றபோதே இவ்விபத்து நடந்தது. புகையிரதக்கடவையைக் கார் கடக்க முயன்றபோது, கார் இயந்திரக் கோளாறினால் பாதையில் நிற்கவே காரில் பிரயாணம் செய்தவர்கள் வெளியில் குதித்து ரயிலுக்கு சமிக்ஞை காட்டியும் ரயிலும் நிறுத்தப்படாமல் நிறுத்தப்பட்ட காருடன் மோதியது. [கெ]

## சந்தேக நபருக்கு..

2-ம் பக்கத் தொடர்ச்சி]

சட்டத்தரணி என்.சிறிகாந்தா சட்டத்தரணி கனகமனோகரன் ஆகியோர் ஆஜரானர்கள்.

இம்மாதம் 25-ம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. [க]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu PostBox 49, Telegram Eelanaadu, Telephone 389 Registered Newspaper in Srilanka

## பிறைகண்டால் அறிவிக்கலாம்

(கொழும்பு)

துல்ஹஜ் மாதத்தின் தலைப் பிறையைக் காண்பவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் கொழும்பு பெரியபள்ளிவாசல் நிர்வாகிகளுக்கு அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஹஜ்ஜுப் பெருநாளுக்கான நாளை நிர்ணயிப்பதற்கு உலமாக்களின் மாநாட்டைக்கூட்டவும், அரபாத் தினத்தை நிர்ணயிக்கவும் இந்தத்தகவல் துணையாக அமையுமெனப் பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (அ)

## புத்தூரில் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழ்காங்கிரஸ்கருத்தரங்கு இன்று மாலை புத்தூரில் நடைபெறவிருக்கிறது. தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு ரி. சங்கரப்பிள்ளை, பொதுச் செயலாளர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், மற்றும் வாலிப முன்னணியினர் உரையாற்றுவார்கள். (க)

## அடையாள அணிவகுப்பு மீண்டும் ஒத்திவைப்பு

### பொலிஸார் தயாரில்லையாம்

(மாவிட்டபுரம்)

சங்கானைப் பொலிஸாரால் துப்பாக்கிப்பிரயோகம் செய்து கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்மீதான அடையாள அணிவகுப்பிற்குப் பொலிஸார் தயாராக இல்லாததால் இம்மாதம் 14ம் திகதிக்கு அடையாள அணிவகுப்பு ஒத்திவைக்கப்பட்டது.

வடபகுதியில் இடம்பெற்ற பல வன்செயல்கள் தொடர்பாக ஏற்கனவே கைதாகி விலங்குடன் தப்பியோடிய அளவெட்டியைச் சேர்ந்த சரவணமுத்து சற்குணசிங்கம் என்பவர் சங்கானைப் பொலிசாரால் அண்மையில் துப்பாக்கிப்பிரயோகம் செய்து கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டார்.

இவர்மீதான அடையாள அணிவகுப்பு நேற்றுமுன்தினம் நடைபெற இருந்தது. இதற்கான உத்தரவை மல்லாகம் நீதிபதி கடந்த தவணையின் போது பிறப்பித்தார்.

மூடிய வாகனத்தில் நேற்று மல்லாகம் நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்ட சந்தேக நபரை அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்த பொலிஸ் தரப்பில் ஆயத்தம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. சங்கானைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜனாப் ரி. ஜே. மிஸ்கின் சந்தேகநபர் மீது ஏற்கனவே ஆறு குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டதாகவும் மேலும் ஆறு குற்றச்சாட்டுக்கள் அவர்மீது சுமத்தப்பட இருப்பதாலும், இந்த 12 குற்றச்சாட்டுகளுக்கும் 100 பேர் வரையில் சாட்சிகள் இருப்பதாலும் அவர்களது சாட்சியங்களை பதிவுசெய்து அடையாள அணிவகுப்பிற்கு ஆயத்தம் செய்ய ஒருமாதகால அவகாசம் தேவை என்று கேட்டுக்கொண்டார்.

இதை சந்தேக நபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆட்சேபித்தார்.

"பொலிஸார் அடையாள அணிவகுப்பிற்காக மூன்றுதடவைகள் தவணை கேட்டுவிட்டார்கள், சந்தேகநபர் கைதாகி 20 நாட்களுக்கு மேலாகியும் இதுவரை சாட்சியங்களின் வாக்குமூலங்களை பதிவுசெய்யாதிருப்பது வேடிக்கையாக உள்ளது. அதிலும் ஒரு சாட்சியம்கூட இன்னும் பதிவுசெய்யப்படவில்லை என்று பொலிஸார் கூறுகின்றனர். ஒரு வருடத்துக்கு முன்பு நடந்த வன்செயல்கள் தொடர்பாக பொலிஸார் சாட்சியங்களை பதிவுசெய்யாமல் வெறும் குற்றச்சாட்டுகளுடன் சந்தேக நபரை அடையாள அணிவகுப்பிற்குட்படுதத முடியாமலும் பிணையில்விட முடியாமலும் மேலும் மேலும் தவணை கேட்பது நீதியாகாது. ஆகவே இவரை விரைவில் அடையாள அணிவகுப்பிற்குட்படுத்த வேண்டும்" என்று சந்தேக நபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கேட்டுக்கொண்டார்.

மல்லாகம் பதில் நீதிபதி திரு. ஜி. வி. பாலசிங்கம் சந்தேகநபரை இம்மாதம் 24ம் திகதி அடையாள அணிவகுப்பிற்குட்படுத்துமாறும் அதற்கிடையில் சங்கானைப் பொலிசாரை சாட்சியங்களை தயார் செய்யுமாறும் உத்தரவிட்டார்.

சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினத்துடன் சட்டத்தரணிகள் எஸ். சிவபாக்கியநாதன், எஸ். புண்ணியமூர்த்தி, மு. திருநாவுக்கரசு ஆகியோரும் ஆஜராகினர். சங்கானைப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஜனாப் ரி. ஜே. மிஸ்கின் பொலிஸ்தரப்பில் ஆஜரானர்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி தாபகர் நினைவு தினமும், பரிசளிப்புவிழாவும் இன்று மாலை நடைபெறவுள்ளது.

விழாவில் பிரதமவிருந்தினராக வடமாநிலகல்விப்பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் கலந்துகொள்வார் பரிசில்களை திருமதி ஞா. மாணிக்கவாசகர் வழங்குவார்.

0 0 0

வேலணை மேற்கு முடிப் பிள்ளையார் இந்து இளைஞர் மன்றத்தின் புதிய கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டு வைபவம் இன்று மாலை நடைபெறவுள்ளது. அடிக்கல்லை பிரம்மஸ்ரீ இ. சோமாஸ்கந்த சர்மா நாட்டுவார். (கெ)

## இன்று விசாரணை

(புலோலி)

பருத்தித்துறை மகளிர் கல்லூரி ஆசிரியைகளின் சம்பள பணம் கொள்ளைதொடர்பான விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு கே. ஞானச்சந்திரன்முன்னிலையில் நடைபெறும்.

இக்கொள்ளை தொடர்பாக 11 இளைஞர்கள் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். (க)

## மாவட்ட மந்திரிகளின் பொறுப்பு; ஜனதிபதி வலியுறுத்து

(கொழும்பு)

அபிவிருத்தி வேலைகளைத் துரிதமாக நிறைவேற்றுவது மாவட்டஅமைச்சர்களின் முக்கிய பொறுப்பாக இருக்க வேண்டும் என்று நேற்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன அரசாங்க கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் வலியுறுத்தினர்.

மாவட்ட அமைச்சர்கள் வரம்புமீறி நடக்கலாகாதென்றும், மாவட்ட அபிவிருத்தியை அவர்கள் உறுதிப்படுத்தவேண்டுமென்றும் தனிப்பட்டவர்களுக்கு சேவை செய்யாமல் பொதுமக்களுக்கு சேவைசெய்ய வேண்டுமென்றும் ஜனாதிபதிவற்புறுத்தினர்.

பிரதமமந்திரி திரு. ஆர். பிரேமதாசா பேசும்போது மாவட்ட அமைச்சர்கள் திறமையாகவும் சார்பில்லாமலும் நடந்து தமது பெயரைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

நீர்ப்பாசன. மின்சக்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா பேசும்போது உலக வங்கியின் தலைவர்கள் அண்மையில் இலங்கை வந்திருந்தபோது அபிவிருத்தி வேலைகளில் பூரண திருப்தி தெரிவித்திருப்பதாகவும், உதவி வழங்க உறுதியளித்திருப்பதாகவும் கூறினர்.

## யாழ்ப்பாணத்தில் நாளை நடக்கும் கருத்தரங்கு

(கிளிநொச்சி)

அகில இலங்கைத் தமிழ் இந்து அறச்சாலைகள் ஒன்றியத்தின் செயலாக்கக் கருத்தரங்கு நாளை 21ந் திகதிசனிக்கிழமை யாழ். சைவபரிபாலன சபை நாவலர்மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இக்கருத்தரங்கில் பேராசிரியர்கள், அறிஞர்கள், பொதுப் பணி ஊழியர்கள் போன்றோர் கருத்துக்களை வழங்கவிருக்கின்றார்கள். இக்கருத்தரங்கினை கிளிநொச்சிக்குருகுலம், வதிரி பரமானந்தாசிரமம், கைதடி சைவஅநாதைகள் நிலையம், திருகோணமலை சிவானந்த தபோவனம் என்பன ஒழுங்கு செய்துள்ளன. (அ)

## இவரும் விசேட சித்தி

(யாழ்ப்ப ண )

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த முத்துலிங்கம் பவனேந்திரகுமார் என்ற மாணவரும் கடந்த ஏப்ரலில் நடைபெற்ற ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சையில் நான்கு விசேட சித்திகளுடன் சித்தியெய்தியுள்ளார்.

இப் பரீட்சையில் முதல் தடவையாகத் தோற்றி தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதிகம், இரசாயனம் ஆகிய பாடங்களில் சித்தி பெற்ற இம் மாணவர் கல்லூரியின் மாணவத் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## சட்டவிரோத...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வத்தளைத் தொகுதி புதிய பிரதிநிதி திரு. ஜே. அமரசிங்க சபையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

நீதிமன்றங்களில் நீதிபதிகளும், சட்டத்தரணிகளும் அணியவேண்டிய சீருடைகள் பற்றிய உயர்நீதிமன்ற நீதிபதிகளின் சிபார்சுகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன.

ஹங்குராங்கெட்ட எம். பி. 'தினகர' என்ற சிங்கள பத்திரிகை தம்மைப்பற்றிய தவறான வதந்தியொன்றை வெளியிட்டிருப்பதாக சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

### ஹஜ்ஜாஜிகள்

ஹஜ் யாத்திரை மேற்கொள்ளவிருந்த ஹஜ்ஜாஜிகளை கொரிய விமானசேவை விமானங்கள் ஏற்றிக்கொள்ளாமல் சென்றுவிட்டதாகவும் இவர்களை ஏற்றிச்செல்ல சுவிஸ் விமான நிறுவனம் ஒன்று ஒப்புக் கொண்டிருப்பதாகவும் போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம் எச் மொகம்மது சபையில் தெரிவித்தார்

குதிரைப்பந்தயம் பிடிப்பவர்களிடமிருந்து 10 சதவீத தீர்வை அறவிடுவது தொடர்பான உபவிதிஒன்றை நிதியமைச்சர் சபையில் தாக்கல் செய்தார்.

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சம்பத்திரிசியார் கல்லூரிக்கும் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரிக்கும் இடையில் இன்று யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் உதைபந்தாட்டப் போட்டி ஒன்று நடைபெறுகிறது. (இ)

## சோவியத்யூனியன் செல்கிறார்



(கண்டி)

இலங்கைத் தோட்டச் சேவையாளர் சங்கத் தலைவர் திரு. கி. சுப்பையா சோவியத் யூனியனிலுள்ள 'அல்மா ஆட்டி' என்ற நிறுவனத்தின் அழைப்பை ஏற்று இவ்வாரம் ரஷ்யா செல்கிறார்.

செக்கோஸ்லேவேக்கியாவில் தலைமை அலுவலகத்தைக் கொண்ட சர்வதேச விவசாயப் பயிர்ச்செய்கை நிறுவனமே ஆசிய கிராமதொழிற் சங்கங்களின் மாநாட்டைக் கூட்டவிருக்கின்றது.

திரு. சுப்பையா குறிப்பிட்ட மாநாட்டில் சுமார் 17,000 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கைத் தோட்டச்சேவையாளர் சங்கத்தின் ஈழத்துப் பிரதிநிதியாகக் கலந்துகொள்கின்றார்.

இவர் நாவலப்பிட்டித்தொகுதியிலுள்ள உடகந்தனைகிறகட் தோட்டத்தில் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றுகின்றார். அகில இலங்கைச்சர்வோதய இயக்கத்தின் நாவலப்பிட்டிக்கிளையின் முக்கிய நிர்வாக உறுப்பினராவார்.

பிரபல சமூகசேவையாளரான திரு. சுப்பையா காரைநகரிலுள்ள இலகடிக்கிராமத்தைப்பிறப்பிடமாகக் கொண்டவர் காலஞ்சென்ற திரு.க. கிருஷ்ணர் தம்பதிகளின் இரண்டாவது மகனான இவர், காரைநகர் இந்துக்கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகியவற்றின் பழையமாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. சர்வதேச விவசாயப் பயிர்ச்செய்கை நிறுவனத்தின் மாநாட்டில் கலந்துகொண்டு விட்டு தென்னிந்திய தோட்டச் சேவையாளர் சங்கத்தின் அழை... ஏற்று இந்தியா செல்லவிருக்கின்றார்.